முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1105

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.10.2022, சனிக்கிழமை

1. ஆறுமுக சக்தியே அரங்கா வாழ்க
   அன்னதான வள்ளலே தேசிகா வாழ்க
   மாறுதலை செய்தே தீருவேன்என
   மாதவசியாக வந்த அரங்கனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி ஆறுமுகன் யான்
   வழங்குவேன் உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 21ம் நாள் 08.10.2022, சனிக்கிழமை)
   ஊழ்வெல்லும் கலியின் மிகுந்த சக்தி
   உத்தம ஞானி அரங்கன் நீயப்பா
3. அப்பனே உன்திருவடி பற்றும் மக்களுக்கு
   அப்பழுக்கில்லா ஞானசக்தி உறுதி என்பேன்
   காப்புகூடி அரங்கன் உன்தயவால்
   கலியுகத்தில் அவர்களெல்லாம் ஞானியாகும் வாய்ப்பு
4. வாய்ப்பு கண்டு உன்னால் தேறுவர்என
   வாழ்த்தியே அரங்கன் உனக்கு தொடர்ந்து ஞானஅறிவுரை ஆசி
   ஆசிதனை ஆறுமுகன் அளவிலா
   ஆற்றல்பட உரைத்து வருவேன்
5. வருகவே உன்னுள்ளே என்சக்தி
   வல்லமை கூட்டி வையகத்தை காக்கும் ஒரேநோக்கமாக
   பெருமைபட அறமாக தீட்சையாக
   பிசகில்லாத ஞானஉபதேசமாக கடந்து வர
6. வருகின்ற உன்மார்க்கமே உலகத்தை
   வள்ளல் தன்மை கொண்ட ஞானஉலகமாக மாற்றி
   பெருமைபட ஞானஆட்சிக் காலத்தை
   பிசகின்றி உன் வழிகாட்டல் அமைத்துத் தரும்
7. தருகவே அரங்கன் தயவை பெற்ற மக்களுக்கு
   தரணியில் ஞானசித்தி உண்டு
   பெருமை கொண்டு அரங்கன் தர்மத்தை
   பிசகின்றி காத்து வரும் மக்களுக்கும்
8. நேசமுடன் ஆறுமுகன் என்ஆசியோடு நினைத்த வண்ணம்
   ஞானசித்தியும் உலகோர்க்கு உறுதியாகும்
   உறுதிதந்தேன் அரங்கன் வழி தொடரும் உத்தமர்கள் யாவருக்கும்
   கலியினில் இனிபிறவாத பெரும்பேறு பிசகின்றி சித்தியாகும் எனக்கூறி

9. கூறியே அரங்கன் வழி
குறையிலா உலகோர் ஞானத்தொடர்பை
தெரிவிப்பேன் மிகுதியாக்கி வருதல் காண
தேசமெல்லாம் ஞான ஆட்சிக்காலம் அடைந்து மேன்மை காணும்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–